# துறையூர்நகராட்சி

2024–ம் ஆண்டு ஜீன் மாதம் 28.06.2024 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: நகர்மன்றத்தலைவர். துறையூர்.

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>28.06.2024</td><td>01</td><td>துறையூர்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 21.04.2023, 16.05.2023, மற்றும் 22.06.2023 ம் தேதி கோரப்பட்டது. வரிசை எண் 1 முதல் 8 வரை கண்டுள்ள இனத்திற்கு ஏல பொறுப்புத்தொகை எவரும் செலுத்தாததால் ஏலக் கேள்வி ஏதும் இல்லை. மேலும் மேற்காணும் இனங்களுக்கு பொது ஏலம் கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>குத்தகை இனம் விபரம்</th></tr>
<tr><td>1.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். (ஒப்படைக்கும் நாள் முதல்)</td></tr>
<tr><td>2.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல செய்துகொள்ளும் குத்தகை உரிமம். (ஒப்படைக்கும் நாள் முதல்)</td></tr>
<tr><td>3.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணாபேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டணகழிப்பிடத்தில் உபயோக்கும் நபர்களிடம் கட்டணம் வசூல செய்துகொள்ளும் குத்தகை உரிமம். (ஒப்படைக்கும் நாள் முதல்)</td></tr>
<tr><td>4.</td><td>துறையூர்நகராட்சிக்கு சொந்தமான தினசரிகாய்கனி மார்கெட்டில் கட்டியுள்ள 1 முதல் 45 கடைகள் மற்றும் அதற்கு செல்லும் நடைபாதை நீங்கலாக பின்பக்கம் (கீழக்கே) உள்ள் காலியிடத்தில் தரையில் வைத்து செல்லும் விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம். (ஒப்படைக்கும் நாள் முதல்)</td></tr>
<tr><td>5.</td><td>துறையூர்நகராட்சிக்கு சொந்தமான பழையநகராட்சி அலுவலகவளாகத்தில் இயங்கிவரும் இருசக்கரவாகனம் நிறுத்தி கொள்வர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம். (ஒப்படைக்கும் நாள் முதல்)<br>தற்கான த்தில்</td></tr>
<tr><td>6.</td><td>துறையூர்நகராட்சிக்கு சொந்தமான சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடைகள், 15,16,17,18.34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.</td></tr>
<tr><td>7.</td><td>துறையூர்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்)</td></tr>
<tr><td>8.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,6,7,9,10,18,23 மற்றும் 24 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்).</td></tr>
</table>
ந.க.எண்.1096/2023/அ2<br>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
மேற்காணும் குத்தகை இனங்கள் வரிசை எண் 1 முதல் 5 வரை கண்டுள்ள இனங்கள் நகராட்சி பொறுப்பில் உள்ளது என்பதை மன்றம் பதிவு செய்யலாம். மேலும் வரிசை எண்.6,7,8, –ல் கண்டுள்ள இனங்கள் ஏலம் போகாததால் கேட்பு இல்லை எனவும் வரிசை எண்.1 முதல் 5 வரை ஆண்டு குத்தகை இனங்கள் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு யாரும் கலந்து கொள்ளவில்லை எனவே அலுவலகத்தின் மூலம் இந்நகராட்சி பணியாளரைக் கொண்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. என்பதனை பதிவு செய்யவும், மேற்காணும் வ.எண்.1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:183<br>அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>02</td><td>துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.பெ.முத்தையா /டி.பெருமாள் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2024–ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ 10000 /– வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திரு. பெ.முத்தையா / டி.பெருமாள், தூய்மை பணியாளர் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>ந.க.எண்.1461/2024/சி1</td><td>தீர்மான எண்:184<br>அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>(அ.கு) அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.06.2024</td><td>03</td><td>துறையூர் நகராட்சியில் கணக்கர் நிலை–2 ஆக பணிபுரிந்து வரும் திரு.சா.ரெத்தினப்பா என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.04.2024–ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ 10000/– வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திரு. சா.ரெத்தினப்பா, கணக்கர் நிலை–2 என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4003/2023/சி1)<br><u>(அ.கு)</u><br>அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:185 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>04</td><td>துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. வை.சேகரன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.04.2024–ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ 10000 /– வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திரு. வை.சேகரன், தூய்மை பணியாளர் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4005/2023/சி1)<br><u>(அ.கு)</u> அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:186 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>05</td><td>துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.செ.செல்வி / செல்வராஜ் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2024–ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ 10000 /– வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திருமதி.செ.செல்வி/ செல்வராஜ், தூய்மை பணியாளர் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ.கு) அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1460/2024/சி1</td><td>தீர்மான எண்:187 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>06</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், துறையூர் நகராட்சி பழைய நகராட்சி அலுவலகத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இரு சக்கரவாகனம் நிறுத்திக் கொள்வதற்கான குத்தகை உரிமத்திற்கு கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடைகள் 15,16,17,34,42,43.44.மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5, 9,10 மற்றும் 18 கடைகளுக்கும் குத்தகை உரிமங்கள் 2023–2026 முடிய மூன்றாண்டுக்கான உரிமம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 25.01.2024–ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினகரன், திருச்சி பதிப்பு</td><td>25,01,2024</td><td>ரூ.33,810/–</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Bright Advertising, Chennai, நிறுவனம் ரூ.33,810/– வழங்க கேட்டுக்கோன்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.1096/2023/அ1<br><u>அலுவலககுறிப்பு:</u><br>அ) அனுமதிக்கலாம்<br>ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்</td><td>தீர்மான எண்:188 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>07</td><td>துறையூர் நகராட்சி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைந்துள்ள தேர்வுநிலை நகராட்சியாகும். துறையூர் நகராட்சியில் பரப்பளவு 14.55 சதுர கி.மீ ஆகும். இந்நகராட்சியில் 24 வார்டுகளை கொண்டு 914 தெருக்கள் உள்ளடக்கிய 87.665 கி.மீ சாலை மற்றும் சிறியது பெரியதுமாக சுமார் 109.25 கி.மீ நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைந்துள்ளது.<br>துறையூர் நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் அமைந்துள்ள சிறு மற்றும் பெரிய மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டு சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாகி உள்ளபடியாலும், உரிய<br><br>பராமரிப்பின்றி குப்பைகள், கழிவுகள் பிரதான கால்வாய்கள் மூலம் சின்ன ஏரி மற்றும் பெரிய ஏரி நீர்நிலைகளில் கலந்து சுகாதார சீர்கேடுகள் மற்றும் நிலத்தடி நீர்மட்டம் மாசு அடையும் நிலை</td><td>தீர்மான எண்:189 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளது. எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் நலன் கருதி துறையூர் நகர் பகுதி முழுமையும் அனைத்து சிறு மற்றும் பெரிய வடிகால்களை மூடியுடன் கூடிய கான்கிரீட் வடிகால்களாக மாற்றம் செய்து வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகளை பிரதான கால்வாய்களுடன் இணைக்கும் இடத்தில் வடிகட்டும் அமைப்பு மற்றும் கசடு சேமிப்பு தொட்டி அமைத்து வடிகட்டிய கால்வாய் நீர் மட்டும் வெளியேறும் வகையில் சுமார் 84 கி.மீ நீளத்திற்கு மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்திடவும், பேருந்து நிலையம் எதிர்புறம் அமைந்துள்ள சின்ன ஏரி மாசு அடைந்துள்ள நீரினால் சுகாதார சீர்கேடு உருவாகும் நிலை உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி சின்ன ஏரியில் உள்ள மாசு அடைந்துள்ள நீரை சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சுத்திகரிக்கும் பணி அமைத்திடவும், உரிய மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்திடவும், உரிய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்திடவும் வேண்டியுள்ளதால் அதனை Consultancy மூலம் தயார் செய்து உரிய காலத்தில் சமர்த்திட வேண்டியுள்ளதால் மதிப்பீட்டு தொகையில் 1/2% சதவீதம் ஆலோசகர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**(ந.க.எண். 3771/2023/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| **28.06.2024** | **08** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் ஆழ்துளை கிணறு மூலம் மினி பவர் பம்பு மற்றும் கைபம்பு அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தேவையான தண்ணீர் வழங்க 98 ஆழ்துளை கிணறு மற்றும் 73 கைபம்புகளில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் மின்மோட்டார் மற்றும் கைபம்புகளில் பழுதுகளை சரிசெய்யும் பராமரிப்பு மேற்கொள்ளவும் மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. எதிர்வரும் கோடைகாலத்தை உத்தேசித்து பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பராமரிப்பு பணியினை தொடர்ந்து ஏதுவாக மேலும் 6 மாதம் மேற்கொள்வதற்கு கால நீட்டிப்பு செய்து அதே விலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2001/2022/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:190 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **09** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் போது அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் திடீர் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது.<br>எனவே, பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் அடைப்பினை சரி செய்யவும் மற்றும் திடீர் உடைப்பினை சரிசெய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி எதிர்வரும் கோடைகாலத்தில் தண்ணீர் விநியோகம் பாதிக்காத வகையில் பணியினை மேற்கொள்வதற்கு 6 மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து அதே விலைவிகிதத்தில் குடிநீர் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.2002/2022/இ1)<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:191 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **10** | துறையூர் நகராட்சியில் தெருவிளக்குகள், காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படும் 4 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள், ஆழ்துளைக்கிணறுகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்படும் நீர்த்தொட்டிகள் (சிறுமின்விசை பம்புகள் மூலமாக), பேருந்து நிலைய மின் பணிகள் பராமரிப்பு, கழிப்பிட கட்டிடங்களில் மின் பராமரிப்பு, நகராட்சி அலுவலக கட்டிடம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட பணியிடங்களான மின் கம்பியாளர் –2, மின் பணியாளர் பணியிடம் – 2, மின்கம்பி உதவியாளர் பணியிடம் – 2 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது 03.01.2018 முதல் தெருவிளக்கு பராமரிப்பு தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட விபரப்படி மின் கம்பியாளர், மின் பணியாளர், மின் பணி உதவியாளர் அனைத்து பணியிடங்களும் காலியாக உள்ளதால் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் தவிர மற்ற அனைத்து மின் பணிகளும் பராமரிக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே 01.01.2023 முதல் 31.12.2023 வரை<br><br>ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு | தீர்மான எண்:192 அனுமதி வழங்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது.  மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள ஒரு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதியும் மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்கள் நிர்ணயித்துள்ள விலை விகிதத்தின் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் மின் பணியாளர் ஒருநபர் பெற்று பணி செய்திட 1.02.2024 முதல் 31.12.2024 வரை ஒருவருட காலத்திற்கு உண்டாகும் உத்தேச லெசவினம் ரூ.2.70 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.154 நாள்.29.02.2024ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.  மேலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள 6 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.3368/2022/இ1<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>. | |
| **28.06.2024** | **11** | துறையூர் நகராட்சியில் காவேரி குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பழைய அலுவலக வளாகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத்தொட்டிக்கு நீரளிப்பு வழங்கப்பட்டு வருவதில், தரைமட்டத்தொட்டியில் கேஸ் குளோரினேசன் மூலம் குளோரின் ஏற்றம் செய்வதற்கு Out Sourcing அடிப்படையில் 2 பணியாளர்கள் 01.06.2023 முதல் ஒருவருட காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.4.70 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.370 நாள்.31.03.2023ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தகாலம் 31.05.2024ல் முடிவடைய உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள 2 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.462/2021/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:193 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **12** | துறையூர் நகராட்சியில் காவிரி குடிநீர் விநியோகம் நான்கு பெரிய அளவிலான மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலமும் சின்டெக்ஸ் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.  மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்குவதற்கு குடிநீர் பணியாளர்கள் இல்லாததால், நகராட்சி பகுதிகளுக்கு தடையின்றி குடிநீர்₹ விநியோகம் செய்ய வால்வுகளை இயக்குவதற்கு 6 நபர்களை 01.04.2024 முதல் 31.12.2024 வரை உள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.11.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.157 நாள்.29.02.2024ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.  மேலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள 4 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**ந.க.எண்.3381/2022/இ1**<br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:194 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **13** | துறையூர் நகராட்சியில் ஒரு JCB வாகனம் இயங்கி வருகின்றது.  இந்த வாகனத்தை கொண்டு 24 வார்டுகளிலும் உள்ள மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல், ஆக்கிரமிப்பு அகற்றுதல், குடிநீர் குழாய் அடைப்பு ஏற்படும் போது JCB–யை பயன்படுத்துதல், மழை காலங்களில் மழைநீர் தேங்காமல் இருக்க நீர்வரத்து வாரி சுத்தம் செய்தல், உரக்கிடங்கில் குப்பைகளை அகற்றுதல் போன்ற இதர பணிகள் மேற்கொள்ள ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டில் 01.12.2022 முதல் 30.11.2023 வரை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது.  மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள 2 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்தும், 1.02.2024 முதல் 31.12.2024 வரை 11 மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.2.70 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.158 நாள்.29.02.2024ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.  மேலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள 6 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.2585/2021/இ1<br>**அலுவலக குறிப்பு :**<br>மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:195 அனுமதி வழங்கப்பட்டது |

<table>
<tr>
<td>28.06.2024</td>
<td>14</td>
<td>துறையூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வந்த கீழ்கண்ட 5 நபர்களும் அலுவலக பயன்பாடு மற்றும் ஆணையரின் ஊர்தி ஓட்டுநர், அலுவலக உதவியாளர்கள் 3 நபர்களும் மற்றும் குடிநீர் விநியோக பணியாளர்களாக இரண்டு நபர்கள் ஆக 5 நபர்கள் பணிபுரிந்து வந்தனர். தற்போது மேற்படி திட்டத்தில் பணிபுரிந்த 5 நபர்கள் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தனியார் மயமாகிவிட்டதால் 30.06.2023 முதல் விலக்கிக்கொள்ளப்பட்டனர். எனவே மேற்கண்ட நபர்கள் துறையூர் நகராட்சி அலுவலக அத்தியாவசிய பணியான ஆணையர் ஊர்தி ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் குடிநீர் விநியோக பணியினை மேற்கொண்டு வந்தனர். இதற்கென பணி விதிகளில் பணியாளர் ஒதுக்கீடுகள் ஏதும் வழங்கப்படவில்லை.<br>எனவே நகராட்சி நிர்வாகம் பணி ஒதுக்கீடு செய்து பணி நியமனம் செய்திடும் வரை அலுவலக அவசர அவசியம் கருதி 5 பணியாளர்கள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் (01.03.2024 முதல் 31.12.2024 வரை) 10 மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விலை விகிதத்தில் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.155 நாள்.29.02.2024ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள 5 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.3381/2022/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:196 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>15</td>
<td>. துறையூர் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு கணினியில் மதிப்பீடு தயார் செய்தல், புதிய திட்டங்களுக்கு கருத்துரு தயார் செய்தல், அன்றாடம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தட்டச்சு செய்தல், நகர்மன்ற கூட்ட பொருள் தட்டச்சு செய்தல் போன்ற பணிகளை இந்நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால் மேற்படி பணிகளை செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே 01.01.2023 முதல் 31.12.2023 வரை ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள ஒரு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதியும் மேலும் 01.02.2024 முதல் 31.12.2024 வரை 11 மாத காலத்திற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் தட்டச்சு பணிக்காக ஒரு பணியாளர் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.2.70 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.156 நாள்.29.02.2024ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ள 6 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.3367/2022/இ1<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:197 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>16</td>
<td>துறையூர் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்டிகோ சர்வ் திருச்சிராப்பள்ளி அவர்களிடம் அச்சிட்டு பெற்றமைக்கு செலவினம் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>விபரம்</th><th>பட்டியல் எண்</th><th>GST Rate</th><th>எண்ணிக்கை</th><th>ஒன்றின் விலை</th><th>மொத்த தொகை</th></tr>
<tr><td>01</td><td>இட்லி டோக்கன் (AH0001 to AH 100000)</td><td>TNMP–23–24–101060 dt.11.1.24</td><td>18%</td><td>100</td><td>250</td><td>25000</td></tr>
<tr><td>02</td><td>இட்லி டோக்கன் (A10001 to A1 100000) (AJ001 to AJ10000)</td><td>TNMP–23–24–1262 dt.12.3.24</td><td>18%</td><td>100<br>10</td><td>250<br>250</td><td>25000<br>2500</td></tr>
<tr><td>03</td><td>சாம்பார் டோக்கன் )I0001 to 30000)</td><td>TNMP–23–24–1262 dt.12.3.24</td><td>18%</td><td>30</td><td>250</td><td>7500</td></tr>
<tr><td>04</td><td>தயிர் சாதம் டோக்கன்(I0001 to 30000)</td><td>TNMP–23–24–1262 dt.12.3.24</td><td>18%</td><td>30</td><td>250</td><td>7500</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்:198 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05 | அம்மா உணவகம் தினசரி விற்பனை வரவினங்கள் பதிவேடு (100 பக்கம்) | TNMP–23–25–00035 dt.12.4.24 | 18% | 1 | 250 | 250 |
| 06 | அம்மா உணவகம் இருப்பு பதிவேடு(300 பக்கம்) | TNMP–23–25–00035 dt.12.4.24 | 18% | 1 | 1500 | 1500 |
| | **மொத்தம்** | | | | | 69250 |
| | | CGST | 9% | | | 6232.50 |
| | | SGST | 9% | | | 6232.50 |
| | **ஆக மொத்தம்** | | | | | 81715 |

**அலுவலக குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

---

**28.06.2024** | **17**

இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவின்படியும், இந்நகர்மன்ற தீர்மானங்களின்படியும் விஷன்கேர் பிரைவேட் லிமிடெட் திருச்சி என்ற நிறுவனத்திற்கு நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி ஓராண்டு காலத்திற்கு பணிகளை மேற்கொள்ள 04.05.2023–ம் தேதியன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு மேற்படி, நிறுவனத்தின் மூலம் கடந்த 09.06.2023–ம் தேதி முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்பொழுது மேற்படி, ஒப்பந்த பணியின் ஒரு வருட காலம் வருகின்ற 08.06.2024வுடன் முடிவடைகிறது.

மேற்படி Vision Care Private Limited Trichy என்ற நிறுவனத்திடம் இருந்து காலநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்க கோரி கடந்த 04.05.2024 அன்று விண்ணப்பம் வரப்பெற்றது. பொதுசுகாதார பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி Vision Care Private Limited Trichy என்ற தனியார் நிறுவனத்தின் மூலம் 09.06.2024 முதல் மேலும் 3 மாதங்கள் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை மேற்கொள்ள காலநீட்டிப்பு செய்து பணியினை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 77.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**ந.க.எண்.4244/2018/எச்1**

**அலுவலக குறிப்பு**

1. பொதுசுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:199 அனுமதி வழங்கப்பட்டது

---

**28.06.2024** | **18**

துறையூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் புதிதாக 5 எண்ணிக் இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பழைய நகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் இருசக்கரம் வாகனம் வசூல் உரிமத்திற்கு ஏலம் போகாமல் உள்ளதால் இந்நகராட்சி பணியாளர்கள் கொண்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, அதற்கான டோக்கன் புத்தகங்கள் அச்சிட்டு வழங்குவதற்கு உத்தேச செலவினம் மதிப்பு தொகை ரூ. 150000/– வேண்டி மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.948/2024/அ1

**அலுவலக குறிப்பு**

இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்:200 அனுமதி வழங்கப்பட்டது

---

**28.06.2024** | **19**

துறையூர் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஜெனரேட்டர் பேட்டரி மற்றும் டைனமோ பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி அமைக்க உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் 13.12.2023 அன்று பெறப்பட்டது. அதன் விவரம்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூ) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ அம்மன் பவர் சிஸ்டம், துறையூர் | 13000/– |
| 2 | ஸ்ரீ விக்னேஷ்வரா பேட்டரி ஒர்க்ஸ், துறையூர். | 12700/– |
| 3 | விஜய் பேட்டரி ஆட்டோ எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், துறையூர். | 12500/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.3இல் கண்டுள்ள விஜய் பேட்டரி ஆட்டோ எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் துறையூர் என்ற நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளி விகிதம் குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
ந.க.எண்.4072/2019/இ1

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:201 அனுமதி வழங்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | . | |
| **28.06.2024** | **20** | துறையூர் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் அம்மா உணவகம் தொடர்பான பதிவேடுகள் 2024,25ம் ஆண்டிற்கு (01.07.2024 முதல் 30.06.2025 முடிய) தமிழ் நாடு அரசால் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் அச்சிட்டு பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.3.50லட்சம் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண்:202 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **21** | இந்நகராட்சியின் 2022-2023-ம் ஆண்டிற்கான வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி சார்ந்த வரவு செலவுகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையினரால் ஆண்டு தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 2022-2023-ம் ஆண்டுக்கான தணிக்கைத்தடை எண். 29-ல் தணிக்கை கட்டணம் ரூ. 181802/-ஐ அரசு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி, தொகை ரூ. 181802/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.454/2016/பி1<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதையும் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:203 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **22** | துறையூர் நகராட்சியில் பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிக்கு வாகன எண்.TN45X7856, TN45V0856 கனரக வாகன மற்றும் ஆணையர் பயன்பாட்டிற்கு TN45V5119 ஈப்பு வாகனம் வாங்கப்பட்டது. இவ்வாகனங்கள் கொள்முதல் செய்து 15 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்போது வாகனங்கள் இயக்க முடியாத நிலையில் உள்ளதால் வாகனங்களை கழிவு செய்வதற்காக மண்டல துணை இயக்குநர் அரசு தானியங்கி பணிமனை திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து வாகனங்களை கழிவு செய்வதற்கு மண்டல துணை இயக்குநர் அரசு தானியங்கிப் பணிமனை திருச்சி அவர்களிடமிருந்து கடித செ.மு.எண்.அ6/3969/2022 நாள்.13.01.2023ல் கழிவு செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.865/2021/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | தீர்மான எண்:204 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **23** | தமிழக அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டங்கள், செயல்பாடுகள், வளர்ச்சி, சாதனைகளை சிறப்பு மலராக வெளியிடப்பட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, துறையூர் நகராட்சிக்கான குடிநீர் திட்டம் (அம்ரூத் 2.0 கீழ் ரூ.108.90 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிக்கு ஒதுக்கீடு செய்ததை தினகரன் நாளிதழில் 23.10.2023 அன்று விளம்பரம் செய்தமைக்கு ரூ.16664.00 வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.3944/2023/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:205 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **24** | துறையூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. சி. ராஜா என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2024-ல் ஓய்வு பெற உள்ளார். ஆதாலால் அரசாணை எண். 111, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 13.08.2007-ன்படி அன்னாருக்கு சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத்தொகை ரூ. 10000/- வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்படி, பங்குத்தொகையினை திரு. சி. ராஜா, தூய்மை பணியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ.கு) அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி, செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:206 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **25** | துறையூர் நகராட்சியில் ஓட்டுனராக பணிபுரிந்து வரும் திரு.செ.சண்முகம் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2024-ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன்படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்குத் தொகை ரூ 10000/- வழங்கப்பட வேண்டி உள்ளது. எனவே மேற்படி பங்குத் தொகையினை திரு. செ.சண்முகம் ஓட்டுனர் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.1460/2024/சி1<br>**(அ.கு)** அ. அனுமதிக்கலாம்.<br>ஆ. மேற்படி செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:207 அனுமதி வழங்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>.</td><td></td></tr>
<tr><td>28.06.2024</td><td>26</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் இந்நகராட்சியில் குழாய் பொருத்துனராக பணிபுரிந்து வரும் திரு.தா.நீலமோகன் (தற்காலிக பணி நீக்கம்) என்பவரை இலால்குடி நகராட்சிக்கு பணி மாறுதல் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இப்பணியாளர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள மறு சீராய்வு (Review petition) வழக்கு நிலுவையில் உள்ளதால் பணியில் சேர அனுமதிக்கலாமா? என்பது குறித்து இவ்வலுவலக ந.க.எண்.3988/2018/சி1 நாள் 30.11.2023–ல் அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன் என்பவரிடம் சட்ட கருத்துரு கோரப்பட்டது. மேற்கண்ட வழக்கிற்கு அரசு வழக்கறிஞர், திரு.எம்.ராஜராஜன் 05.03.2024ம் தேதியில் சட்டக்கருத்துரு வழங்கியுள்ளார். இச்சட்டக் கருத்துரு வழங்கப்பட்டமைக்கு வழக்கு கட்டணமாக தொகை ரூ 10000/– வழங்க கோரி மனு செய்துள்ளார். எனவே மேற்கண்ட தொகை ரூ.10000/– தனியருக்கு வழங்கிட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண்.3988/2018/சி1<br>(அ.கு). அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:208 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>27</td><td>இந்நகராட்சிக்கு சொந்மான தினசரி சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடை எண்.38, வரிவிதிப்பு எண்.087/138 ஆனது திரு. மோகன் என்பவர் குத்தகை எடுத்து நாளது தேதிவரை அனுபவித்து வந்தார். மேலும், 2023–2024–ம் நிதியாண்டு வரை வாடகை தொகையினை நிலுவையின்றி செலுத்திவிட்டார். தற்போது கடையினை இந்நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்கிறார். எனவே, அரசாணை நிலை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 03.07.2007–ன்படி குத்தகை உரிமத்தினை திரும்ப ஒப்படைப்பு செய்யவும் உரிமம் ஆண்டில் ஏலதாரர் தான் எடுத்துள்ள ஏல இனத்தினை நிர்வகிக்க இயலாத பட்சத்தில் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி குத்தகை பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்ப்பட்டு சுவாமிநாதன் மார்கெட் கடை எண்.38–ஐ மறுஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.1068/2023/அ1<br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:209 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>28</td><td>துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0இன் கீழ் கழிவு நீர் ஊர்தி கொள்முதல் செய்வதற்கான மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 03.11.2023ம் தேதியன்று நடைபெறவுள்ளது என தினகரன் நாளிதழில் 22.10.2023 அன்று விளம்பரம் வெளியிட்டமைக்கான விளம்பர கட்டணம் ரூ.6762/–யை வழங்கிட கோரி Bright Advertising Chennai நிறுவனத்திடமிருந்து தொகைப் பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கான விளம்பரத் தொகை ரூ.6762/–யை Bright Advertising Chennai நிறுவனத்தினருக்கு வழங்கிட மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண்.2803/2023/இ1<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2. திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:210 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>29</td><td>துறையூர் நகராட்சியில் குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணம் 2023–24ம் ஆண்டுக்கு கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் உரிமையாளர்களிடம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதன் விபரம்.
<table>
<tr><th>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம்</th><th>கருங்கல் ஜல்லி சாலை ரூ. (Earthern Road)</th><th>தார்சாலை ரூ. (BT Road)</th><th>சிமெண்ட் சாலை ரூ. (CC Road)</th></tr>
<tr><td>0–30 மீட்டர் நீளத்திற்கு</td><td>2475</td><td>5210</td><td>6000</td></tr>
<tr><td>30–90 மீட்டர் நீளத்திற்கு</td><td>3820</td><td>6535</td><td>7325</td></tr>
</table>
எனவே அரசாணை (நிலை) எண்.34 நாள்.15.02.2010ன் படி 2024–25 ஆம் ஆண்டிற்கு குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணத்தை தற்போதுள்ள கட்டணத்திலிருந்து 5% உயர்வு செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் உரிமையாளர்களிடம் வசூல் செய்திட கீழ்காணும் விபரப்படி சாலை சீரமைப்பு கட்டணம் நிர்ணயம் செய்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1156/2018/இ2)
<table>
<tr><th>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம்</th><th>கருங்கல் ஜல்லி சாலைக்கு (Earthern Road) ரூ.</th><th>தார்சாலைக்கு (BT Road) ரூ.</th><th>சிமெண்ட் சாலைக்கு (CC Road) ரூ.</th></tr>
<tr><td>0–30 மீட்டர் நீளத்திற்கு</td><td>2600</td><td>5470</td><td>6300</td></tr>
<tr><td>30–90 மீட்டர் நீளத்திற்கு</td><td>4015</td><td>6865</td><td>7710</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</td><td>தீர்மான எண்:211 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.06.2024 | **30** | இந்நகராட்சிக்கு சொந்தமான 1 பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், 2 நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், 3 துறையூர் நகராட்சி பழைய நகராட்சி அலுவலகத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இரு சக்கரவாகனம் நிறுத்திக் கொள்வதற்கான குத்தகை உரிமத்திற்கு கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் 4 துறையூர், நகராட்சிக்கு சொந்தமான தினசரிகாய்கனி மார்க்கெட்டில் கட்டியுள்ள 1 முதல் 45 கடைகள் மற்றும் அதற்கும் செல்லும் நடைபாதைகள் நீங்கலாக பின் பக்கம் (கிழக்கே) உள்ள காலியிடத்தில் தரையில் வைத்து விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடைகள் 15,16,17,34, 42,43.44.மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5, 9,10 மற்றும் 18 கடைகளுக்கும் குத்தகை உரிமங்கள் 2023-2026 முடிய மூன்றாண்டுக்கான உரிமம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 25.01.2024-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.<br><br>**வ. எண்** \| **விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்** \| **விளம்பரம் செய்யப்பட்டநாள்** \| **தொகை (ரூபாய்)**<br>1 \| தினகரன், திருச்சி பதிப்பு \| 11.06.2024 \| ரூ.33,810/-<br><br>மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு செய்யப்பட்டதற்கு **Adwave Advertising Private Ltd., Chennai**, நிறுவனம் **ரூ.33,810/-** வழங்க கேட்டுக் கோன்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண்.1110/2023/அ2**<br>**<u>அலுவலககுறிப்பு:</u>**<br>அ) அனுமதிக்கலாம்<br>ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம் | தீர்மான எண்:212 அனுமதி வழங்கப்பட்டது |

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஒம்/-
ஆணையர்,
துறையூர்நகராட்சி

**துறையூர்நகராட்சி**

2024–ம் ஆண்டு ஜீன் மாதம் 28.06.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: நகர்மன்றத்தலைவர், துறையூர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| **28.06.2024** | **1** | துறையூர் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் உள்ளதால் வாகனங்கள் பாதுகாப்பு நலன் கருதி CCTV கேமரா பொருத்துதல் மற்றும் நுழைவுவாயில் கேட் பராமரித்தல் பணி செய்வதற்கான மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.1739/2024/இ1)**<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:213 அனுமதிக்கப்பட்டது |
| **28.06.2024** | **2** | துறையூர் நகர பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்களை கருத்தடை செய்வதற்கு ஏதுவாக வெங்கடேசபுரம் உரக்கிடங்கில் பழைய பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தினை பராமரிப்பு பணி செய்து அந்த கட்டிடத்தில் ABC Center அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.1741/2024/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:214 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **3** | துறையூர் நகராட்சிக்குட்பட்ட வெங்கடேசபுரம் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் IUDM திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. அதில் சோலார் பவரில் இயக்கிட மட்டுமே வழி வகை செய்யப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் அதனை இயக்கிட மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மின்சாரத்திலும் இயக்கிடவும் மற்றும் மின்மோட்டார், வயரிங் பணி, Hose மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.1743/2024/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:215 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **4** | துறையூர் நகராட்சி வார்டு எண்.8 சாமிநாதன் நகரில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கான விஸ்தரிப்பு குழாய்கள் பதிக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.1738/2024/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:216 அனுமதி வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **5** | துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்புறம் அம்மா உணவகம் கிழக்கு புறம் உள்ள உயர்கோபுர மின்விளக்கு பாலக்கரை உயர்மின், முசிறி பிரிவுரோடு, ஆத்தூர் சாலை, ஆட்டோ ஸ்டாண்டு பாலக்கரை பழுதடைந்து உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி உடன் சரிசெய்வதற்கு மதிப்பீடு ரூ.6.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**(ந.க.எண்.1742/2024/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br><u>1.</u> மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:217 அனுமதிக்கப்பட்டது |
| **28.06.2024** | **6** | துறையூர் நகராட்சி வார்டு எண்.6 அர நடராஜன் காலனியில் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் சென்று வர இடையூறாக உள்ளதால் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக சிறுபாலம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.7 முத்துநகரில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து அருகாமையில் உள்ள தெருவிற்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கான சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.0.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 1740/2024/இ1)**<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1 மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:218 அனுமதி வழங்கப்பட்டது |

<table>
<tr><td>28.06.2024</td><td>7</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.3 வடக்குத்தெரு மசூதி அருகில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் Flushing, மின்மோட்டார் பொருத்திடவும், மின் இணைப்பு மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1746/2024/இ1)<br><br>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:219 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>8</td><td>துறையூர் நகராட்சியில் காவேரி குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பழைய அலுவலக வளாகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத்தொட்டிக்கு நீரளிப்பு வழங்கப்பட்டு வருவதில், தரைமட்டத்தொட்டியில் கேஸ் குளோரினேசன் மூலம் குளோரின் ஏற்றம் செய்வதற்கு Out Sourcing அடிப்படையில் 2 பணியாளர்கள் ஆகஸ்ட் 2024 முதல் ஒருவருட காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.462/2021/இ1<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:220 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>9</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.17 மற்றும் 18ல் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1744/2024/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:221 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>10</td><td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் வணிக வளாகம் கட்டும் பணிக்கு மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தயாரித்து சமர்ப்பிக்க Consultancy மூலம் தயார் செய்து உரிய காலத்தில் சமர்த்திட வேண்டியுள்ளதால் மதிப்பீட்டு தொகையில் 1% சதவீதம் ஆலோசகர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.3871/2023/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:222 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>11</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.22-ல் மினி பவர்பம்புடன் கூடிய ஆழ்துளைக்கிணறு அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1747/2024/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:223 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>12</td><td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட வெங்கடேசபுரம் உரக்கிடங்கு மற்றும் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் திடக்கழிவு பணியினை மேற்கொள்ள பராமரிப்பு பணியாளர், துப்புரவு பணியாளர், புதைவடிகால் சுத்தம் செய்பவர், புதை வடிகால் பணியாளர், காவலர் ஆகிய 5 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள பணியாளர்கள் சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.178 நாள்.29.02.2024ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.06.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.20% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.60% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.20% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4122/2018/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.R.வரதராஜ், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:224 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>13</td><td>துறையூர் நகராட்சியில் ஆத்தூர் சாலையிலுள்ள மயானத்தில் இயக்குதல் மற்றும்</td><td>தீர்மான எண்:225</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி 2015-2016 மற்றும் 2016-2017 திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி எரிவாயு தகனமேடையை இயக்குவதற்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி (Consent to Operate) 31.03.2023 வரை ரூ.14200/-ம் நடப்பு ஆட்டிற்கான கேட்பு 2024-2026 வரை நவீன எரிவாயு தகன மேடையை தொடர்ந்து இயக்குவதற்கு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியை 2022 முதல் 2026 வரை புதுப்பித்துக்கொள்வதற்கான தொகை ரூ.14200/-ம் ஆக தொகை ரூ.28400/- மட்டும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருச்சி அவர்களுக்கு செலுத்த மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3827/2015/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>14</td><td>துறையூர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் (NNT) 2023-24ன் கீழ் துறையூர் நகராட்சி ஆத்தூர் சாலை மயானம், அம்மாபட்டி சாலை மயானம் மற்றும் வேங்கடத்தானூர் சாலை மயானம் ஆகிய பகுதிகளில் 40W LED தெருவிளக்கு அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.28.00 இலட்சத்திற்கும், ஆத்தூர் சாலையில் உள்ள எரிவாயு தகனமேடையை சுற்றி சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31614/2023/தி2 நாள்.14.03.2024 அன்று அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2570/2023/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.</td><td>தீர்மான எண்:226 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>15</td><td>துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0 (SBM (U) 2.0) 2023-24ன் கீழ் சமுதாய கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.6450/2024/SBM-1(1) நாள்.07.03.2024 அன்று நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 10.06.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தி ல்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">துறையூர் நகராடசியில் அரசு மருத்துவமனை வளாகம், மலையப்பன் சாலை, விநாயகர் தெரு, பெரிய ஏரி சாலை ஆகிய பகுதிகளில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி.</td><td rowspan="2">77.10</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.004% குறைவு</td></tr>
<tr><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 5.10% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">துறையூர் நகராட்சியில் சந்தை ரோடு, திருச்சி ரோடு, கீக்குத்தி தெரு, சங்கீத் நகர் ஆகிய பகுதிகளில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி.</td><td rowspan="2">6.40</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.026% குறைவு</td></tr>
<tr><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 5.07% அதிகம்</td></tr>
</table>
மேற்குறிப்பிட்டுள்ள 2 பணிகளுக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவற்றில் வரிசை எண்.1ல் திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி 0.004% குறைவாகவும், வரிசை எண்.2ல் திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி 0.026% குறைவாகவும் உள்ளதை ஏற்கலாம், மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 750/2024/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.</td><td>தீர்மான எண்:227 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>16</td><td>துறையூர் நகராட்சி புதிய அலுவலகத்தில் கழிப்பறை மராமத்துப்பணி, வாகன நிறுத்துமிடம் (Shed), வயரிங் பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். /2024/இ1)<br><u>அலுவலக குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:228 அனுமதி வழங்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td>17</td><td>.<br>துறையூர் நகராட்சிக்குட்பட்ட சின்ன ஏரியிலுள்ள மாசு அடைந்து சுகாதாரமற்ற நிலையில் இருக்கும் 3MLD கொள்ளவு கொண்ட தண்ணீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்றும் (STP) திட்டத்திற்கு மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால்</td><td>தீர்மான எண்:229 அனுமதி வழங்கப்பட்</td></tr>
</table>

அதனை Consultancy மூலம் தயார் செய்து உரிய காலத்தில் சமர்த்திட வேண்டியுள்ளதால் மதிப்பீட்டு தொகையில் 1% சதவீதம் ஆலோசகர் கட்டணம் வழங்க அனுமதி பெற்றதை தொடர்ந்து 09.11.2023 வரை விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | Smart Builders, Dharmapuri | ரூ.1500000/– |
| 2 | KK Construction, Tiruppur | ரூ.1670000/– |
| 3 | Grandyart construction, Tiruchengode | ரூ.1630000/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் கண்டுள்ள M/S. Smart Builders, Dharmapuri என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2881/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட M/S. Smart Builders, Dharmapuri அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

டது

---

**28.06.2024** | **18**

இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட தனியார் மருத்துவமனையிலும் பொது இடங்களிலும் மற்றும் வீடுகளில் நடைபெறும் பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை ஆகிய நிகழ்வுகளை கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே – 2024 ஆகிய மாதங்களுக்கு கீழ்கண்ட விபரப்படி கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பிறப்பு மற்றும் இறப்பு விபரம் | பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே – 2024 | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | பிறப்பு | 173 | 143 | **316** |
| 2 | இறப்பு | 60 | 47 | **107** |
| 3 | இறந்து பிறந்தவை | 2 | 0 | **2** |
| **மொத்தம்** | | **235** | **190** | **425** |

மேற்கண்ட விபரபடி பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே – 2024 ஆகிய மாதத்திற்கு நிகழ்வுற்ற பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை எண்ணிக்கையை இந்நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந,க.எண்.3389/2023/எச்1)**

தீர்மான எண்:230 அனுமதி வழங்கப்பட்டது

---

**28.06.2024** | **19**

துறையூர் நகராட்சி வார்டு எண்.11 மற்றும் 15ல் உள்ள சிறிய மின்விசை மோட்டாரில் உள்ள சின்டெக்ஸ் தற்பொழுது பழுதடைந்துள்ளது. அதனை அகற்றிவிட்டு புதிதாக சின்டெக்ஸ் தொட்டியினை அமைப்பதற்கும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.1740/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:231 அனுமதி வழங்கப்பட்டது

---

**28.06.2024** | **20**

துறையூர் நகராட்சிக்குட்பட்ட ஆணையர் குடியிருப்பு வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் குடிநீர் வசதி, தரைதளம் பழுது பார்த்தல், கிரில் கேட் அமைக்கும் பணி மற்றும் மராமத்து பணிகள் செய்திட ஆகும் மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.0010/2019/இ1)**

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:232 அனுமதி வழங்கப்பட்டது

---

**28.06.2024** | **21**

துறையூர் நகராட்சிக்குட்பட்ட பழைய அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் Gas Chlorination அடிக்கடி பழுதாகின்றது. இதனால் Chlorination செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் குடிநீரினால் தொற்றுக்கள் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக Liquid Chlorine கொள்முதல் செய்து 4 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளுக்கும் அதன் வளாகத்திலேயே Sintex அமைத்து Chlorination செய்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1754/2024/இ1)**

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:233 அனுமதி வழங்கப்பட்டது

---

**28.06.2024** | **22**

துறையூர் நகராட்சியில் அறிவுசார் மையம் கட்டப்பட்டு 05.01.2024 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி வாயிலாக திறக்கப்பட்டது. மேற்கண்ட அறிவுசார் மையத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.27968/2022/P1

தீர்மான எண்:234 அனுமதி

| | | | |
|---|---|---|---|
| | | நாள்.09.01.2024ன் சுற்றறிக்கையில் அறிவுசார் மையத்தினை நடத்துவதற்கு (Mentor) அறிவுரையாளர் / வழிகாட்டி ஒருவரை நியமித்துக்கொள்ளவும் மேற்படியாளருக்கு மாதாந்திர ஊதியமாக ரூ.5000/– வழங்கவும், வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் ஒருவரை பணியமர்த்தி அறிவுசார் மைய அறிவுரையாளர் / வழிகாட்டி பணி மேற்கொண்டு வருவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2814/2023/இ2)**<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>:**<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | வழங்கப்பட்டது |
| **28.06.2024** | **23** | துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0 (SBM (U) 2.0) 2023–24ன் கீழ் துறையூர் நகராட்சியில் (3MLD) கழிவுநிர் சுத்திகரிப்பு நிலையம் (STP) ரூ.950.00 இலட்ம் மதிப்பீட்டில் அமைத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.6450/2024/SBM–1 நாள்.15.03.2024 அன்று நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2881/2023/இ1)<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம் | தீர்மான எண்:235 அனுமதி வழங்கப்பட்டது |

ஒம்/–இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி